# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. நாகர்கோவில் நகராட்சி எல்கை விரிவாக்கத்தின் போது (தற்போது மாநகராட்சி) இணைக்கப்பட்ட ஆசாரிபள்ளம் பேரூராட்சியில் திரு.பி.கண்மணி என்பவர் 23.03.1976–ல் தினக்கூலி பணியாளராக பணியில் சேர்ந்து பின்னர் 02.08.2001 முதல் மின் உதவியாளராக தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டு 02/09/2006 முதல் மின் உதவியாளர் நிரந்தர பணியாளராக பணி வரன் முறை செய்யப்பட்டு பணிபுரிந்து வந்த நிலையில் 30.06.2011–ல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றுள்ளதுமாகும். இந்நிலையில் ஆசாரிபள்ளம் பேரூராட்சியானது 14.11.2011–ல் நாகர்கோவில் நகராட்சியுடன் இணைக்கப்பட்டது.

இந்நிலையில் திரு.பி.கண்மணி ஓய்வு பெற்ற மின் உதவியாளர், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பயன்கள் கேட்டு தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD) No.6570/2017–ன் 08.11.2019–ம் தேதியிட்ட தீர்ப்பாணையில் இவர் பழைய ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி நீதிமன்ற உத்தரவின் மீது மாநகராட்சி வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை கேட்டு, அன்னார் தெரிவித்த அறிவுரையின் படி மாநகராட்சியால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 08.11.2019–ம் தேதியிட்ட மாண்புமிகு நீதிமன்ற உத்தரவின் மீது மேல்முறையீடு செய்த வகைக்கு திரு.P.ஆதிமூலபாண்டியன் மாநகராட்சி வழக்கறிஞர் கீழ்கண்டுள்ளபடி தொழில்முறை கட்டணம் மற்றும் வழக்கு கட்டணம் கேட்டுள்ளார்.

| | |
|---|---|
| Court Fee | – Rs.5000.00 |
| Typing | – Rs.2000.00 |
| Xerox | – Rs.3000.00 |
| Clerical expenses | – Rs.3000.00 |
| Advocate fees | – Rs.15000.00 |
| Miscellaneous expenses | –Rs. 2000.00 |
| Total | Rs. 30000.00 |

மேற்கண்டுள்ள படி தொழில் முறை கட்டிடம் மற்றும் வழக்கு கட்டணம் திரு.P.ஆதிமூலபாண்டியன் மாநகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.515/2020/இ1

**தீர்மானம் எண். 252 – அங்கீகரிக்கப்பட்டது.**

2. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் "நிர்பயா திட்டத்தின்" கீழ் நகரில் இருட்டு பகுதிகளில் பெண்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி வெளிச்சமாக்கிட ரூ.20.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கருத்துரு Tufidco நிறுவனத்தின் ஒப்புதலுக்கு அனுப்பிட மன்ற அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7432/2021/இ3

**தீர்மானம் எண். 253 – அங்கீகரிக்கப்பட்டது.**

3. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள Bio Methanation plant பழுது நீக்கும் பணி மேற்க்கொள்ள மன்ற தீர்மானம் எண்.218, நாள்.13.06.2018–ல் மதிப்பீடு ரூ.3,30,000/–க்கு மன்ற ஒப்புதல் பெற்று M/S. Environ Engineering மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் CLRI அறிவுரையின் படி பழுதினை முழுமையாக சரி செய்ய கூடுதல் செலவீனம் மேற்க்கொண்டால் தான் முழுமையாக செயல்படுத்தப்படமுடியும் என்பதால் கூடுதல் பணிகள் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள திருத்திய மதிப்பீடு ரூ.9,70,000/–க்கு அனுமதிக்கும், மேற்படி பணிகளை தொடர்ந்து M/S. Environ Engineering நிறுவனம் மூலம் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7255/2018/இ3

**தீர்மானம் எண். 254 – அங்கீகரிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு குழு காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாநகராட்சி பங்கு தொகை Jan/2019 மூதல் March/2020 முடிய உள்ள காலத்திற்குரிய தொகை ரூ.10,02,210/–ஐ அரசு கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.2255/2015/பி1

**தீர்மானம் எண். 255 – அங்கீகரிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கை பேர்க்கால அடிப்படையில் நடந்து வந்ததால், நோயினை ஒழிப்பதற்கு நோயாளிகளை கண்டறிந்து மருத்துவ பரிசோதனை செய்வதற்கும், தடுப்பூசி முகாம்களுக்கு கொண்டு செல்லவும் மற்றும் நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவமனைகளில் அனுமதிப்பதற்கும் 5 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், தனியார்

ஆம்புலன்ஸ் வாகனங்கள் குறைந்த விலைப்புள்ளி பெற்று கொரோனா நோய் தடுப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது கொரோனா தாக்கம் குறைந்துள்ளதால், மொத்தம் உள்ள 5 ஆம்புலன்ஸ் வாகனத்தில் 1 தொல்லவிளை ஆரம்ப சுகாதார நிலையத்திலும், மற்றொன்று வடிவீஸ்வரம் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பயன்படுத்தவும், மீதமுள்ள 3 ஆம்புலன்ஸ் வாகனங்களை விடுவிக்கவும் ஆணையர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வட்டவிளை, வடசேரி மற்றும் கிருஷ்ணன்கோவில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்து பணியாளர்களை மருத்துவ முகாம்கள், பரிசோதனை முகாம் மற்றும் தடுப்பூசி முகாம்களுக்கு அழைத்து செல்லவும் ஆம்புலன்ஸ் வாகனத்தை தவிர்த்து சிறிய ரக வாகனம் (TATA SUMO) தனியார் மூலம் பெற்று வழங்க மருத்துவ அலுவலர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே 5 ஆம்புலன்ஸ் வாகனத்தில் 2 மட்டும் பயன்படுத்திக் கொள்ளவும், மீதமுள்ள 3 வாகனத்தை பணியிலிருந்து விடுவிக்கவும் மற்றும் சிறிய ரக வாகனம் (TATA SUMO) 3ற்கு குறைந்த விலைப்புள்ளி பெற்று 3 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பயன்படுத்தி கொள்ளவும் ஆணையாளர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே சிறிய ரக வாகனம் (TATA SUMO) பயன்படுத்திக் கொள்ள ஒரு வாகனத்திற்கு ஒரு நாள் வாடகை விபரம் கேட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியவரின் பெயர் மற்றும் விலாசம் | ஒரு நாள் வாடகை தொகை ரூ. |
|---|---|---|
| 1 | A.S.சதீஸ்குமார்<br>அனுஷா டிராவல்ஸ்<br>7, ஸ்டேடியம் பில்டிங்<br>பாலமோர் ரோடு<br>நாகர்கோவில் | ரூ.1950/- |
| 2 | S.சிவகுமார்<br>த/பெ. சுகுமாரன்<br>37சி, செந்தூரான் நகர்<br>3வது குறுக்கு தெரு<br>கோட்டார். | ரூ.2200/- |

| | | |
|---|---|---|
| 3 | M.R.ஆனந்த் ரஞ்சன்<br>3, ஆதிசக்தி பவன்<br>சரலூர், கோட்டார் | ரூ.2400/– |
| 4 | P.ராஜேந்திர பிரசாத்<br>சிங்காரம் கேப்ஸ்<br>வெட்டூர்ணிமடம் – அஞ்சல்<br>நாகர்கோவில் –3 | ரூ.2600/– |
| 5 | S.T.செல்வன்<br>S.T.செல்வம் கேப்ஸ்<br>ஸ்டேடியம் ஸ்டாண்ட்<br>நாகர்கோவில் | ரூ.4000/– |

மேற்கண்ட 5 விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள A.S.சதீஸ்குமார், அனுஷா டிராவல்ஸ் என்பவரின் விலைப்புள்ளிகளில் TATA SUMO ஒரு வாகனத்திற்கான ஒரு நாள் வாடகை ரூ.1950/– என குறைவான விலைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி நிறுவனத்திற்கு ஒரு வாகனத்திற்கு ஒரு நாள் வாடகை அனைத்து செலவுகளும் உட்பட ரூ.1950/– நிர்ணயம் செய்து 3 TATA SUMO வாகனங்களுக்கும் நிபந்தனைகளுடன் 21.07.2021 முதல் வாகனம் இயங்க வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் ஏற்கனவே இயங்கி வரும் 5 ஆம்புலன்ஸில் 3 ஆம்புலன்ஸ்–ஐ விடுவிக்கவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்</u> – 1. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதற்கும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மேற்கண்ட 3 TATA SUMO வாகனங்களுக்கான வாடகை கட்டணத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1133/2020/எச்1

**தீர்மானம் எண். 256 – அங்கீகரிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் பதிக்கும் பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது. மேற்படி குழாய் பதிக்கும் போது சாலைகள் சேதமடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேலும் பேவர்பிளாக் சாலைகளில் உள்ள கற்களை எடுத்து மாற்றிய பின்னர் மேற்படி கற்களை திரும்ப பதிக்கலாம் என தெரிவித்ததன் படி ஹென்றி தெருவில் உள்ள

பேவர்பிளாக் கற்களை மாற்றிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,17,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்தி பதினேழாயிரம்) ஒப்பந்தப்புள்ளி கோர அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7569/2021/இ1

**தீர்மானம் எண். 257 – அங்கீகரிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (பகுதி –1)–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக KP ரோடு கல்வாரி லுத்தரன் சர்ச் முதல் மத்தியாஸ் மருத்துவமனை வரை உள்ள NH 47–B–க்கு சொந்தமான தார்சாலை மீது குழாய்கள் பதிப்பதால் சாலையின் ஒரு பகுதி முற்றிலும் சேதமடைவதால் அதனை தேசிய நெடுஞ்சாலை துறையினரின் Specification படி இம்மாநகராட்சி மூலம் மேற்கண்ட பணி மேற்க்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு அனுமதிக்கும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நடவடிக்கைக்கு அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7576/2021/இ1

**தீர்மானம் எண். 258 – அங்கீகரிக்கப்பட்டது.**

8. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (பகுதி –2)–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக KP ரோடு மத்தியாஸ் மருத்துவமனை முதல் டெரிக் சந்திப்பு வரை உள்ள NH 47–க்கு சொந்தமான தார்சாலை மீது குழாய்கள் பதிப்பதால் சாலையின் ஒரு பகுதி முற்றிலும் சேதமடைவதால் அதனை தேசிய நெடுஞ்சாலை துறையினரின் Specification படி

இம்மாநகராட்சி மூலம் மேற்கண்ட பணி மேற்க்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு அனுமதிக்கும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நடவடிக்கைக்கு அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7577/2021/இ1

**தீர்மானம் எண். 259 – அங்கீகரிக்கப்பட்டது.**

9. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (பகுதி –3)–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக KP ரோடு டெரிக் சந்திப்பு முதல் மாவட்ட கிளை சிறைச்சாலை (Sub–Jail) வரை உள்ள NH 47–க்கு சொந்தமான தார்சாலை மீது குழாய்கள் பதிப்பதால் சாலையின் ஒரு பகுதி முற்றிலும் சேதமடைவதால் அதனை தேசிய நெடுஞ்சாலை துறையினரின் Specification படி இம்மாநகராட்சி மூலம் மேற்கண்ட பணி மேற்க்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு அனுமதிக்கும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நடவடிக்கைக்கு அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7578/2021/இ1

**தீர்மானம் எண். 260 – அங்கீகரிக்கப்பட்டது.**

10. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (பகுதி –4)–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக KP ரோடு மாவட்ட கிளை சிறைச்சாலை (Sub–Jail) முதல் லலிதா ஜுவல்லரி வரை உள்ள NH 47–B–க்கு சொந்தமான தார்சாலை மீது குழாய்கள் பதிப்பதால் சாலையின் ஒரு பகுதி முற்றிலும் சேதமடைவதால் அதனை தேசிய நெடுஞ்சாலை துறையினரின்

Specification படி இம்மாநகராட்சி மூலம் மேற்கண்ட பணி மேற்க்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/-க்கு அனுமதிக்கும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நடவடிக்கைக்கு அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7579/2021/இ1

**தீர்மானம் எண். 261 – அங்கீகரிக்கப்பட்டது.**

11. இம்மாநகராட்சியில் துாய்மை பணியாளராக பணியாற்றி வரும் திரு.பாபு / கோவிந்தராஜ், பிரிவு IV என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக சொந்த ஊருக்கு அருகிலுள்ள ஈரோடு மாநகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்ய கேட்டு விண்ணப்பம் கோரியுள்ளார்.

மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் இம்மாநகராட்சியிலிருந்து கடிதம் ந.க.எண்.7993/2018/எச்2, நாள்.10.02.2021–ன் படி ஈரோடு மாநகராட்சியில் துாய்மை பணியாளராக பணியாற்ற ஈரோடு மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் ஈரோடு மாநகராட்சியின் கடிதம் எண்.எச்1/662/2021, நாள்.17.06.2021 கடிதத்தில் ஈரோடு மாநகராட்சியில் துாய்மை பணியாளர் பணியிடம் காலியாக உள்ளது. எனவே திரு.பாபு / கோவிந்தராஜ் என்பவரை துாய்மை பணியாளராக ஈர்த்து கொள்ள தீர்மான எண்.23, நாள்.14.06.2021–ல் இசைவு அளிக்கப்பட்டது.

எனவே இம்மாநகராட்சியில் துாய்மை பணியாளராக பணியாற்றி வரும் திரு.பாபு / கோவிந்தராஜ் என்பவரை நாகர்கோவில் மாநகராட்சியிலிருந்து ஈரோடு மாநகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய மன்ற அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 7993/2018/எச்2

**தீர்மானம் எண். 262 – அங்கீகரிக்கப்பட்டது.**

12. நாகர்கோவில் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதி 2005–ன் படி, மாநகரில் சேகரமாகும் கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக தரம்பிரித்து, மக்கும் கழிவுகளை 11 நுண் உர செயலாக்க மையங்களில் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத கழிவுகள் அதிகமாக வருவதால் அதிலிருந்து பெறப்படும் தடை செய்யப்பட்ட

பிளாஸ்டிக் தாழையூத்து, இந்தியன் சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு வந்த நிலையில், தற்போது அது இயங்காத நிலையில் உள்ளதால், மக்காத கழிவுகள் அதிகமாக தேக்க நிலையில் இருந்து வருகிறது. எனவே, மேற்படி மக்காத கழிவுகளை சரோஜினி பொன்னையா பவுண்டேசன் நிறுவனம் எடுத்துக்கொள்வதாக மேற்படி நிறுவனத்தின் 07.01.2021–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. எனவே பொது சுகாதார பணி அவசர அவசியம் கருதி மக்காத கழிவுகளிலிருந்து விற்பனைக்கு உகந்த பொருட்களை கிலோ ஒன்றுக்கு 0.50 பைசா விகிதத்தில் சரோஜினி பொன்னையா பவுண்டேசன் நிறுவனம் எடுத்துச்செல்ல மாமன்ற தீர்மான எண்.79, நாள்.25.02.2021–ன் படி நிபந்தனைகளுக்குட்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனம் நெகிழி கழிவுகள் அனைத்தும் விற்பனைக்கு உகந்தது இல்லை எனவும், இது ஒரு சமூக சேவைக்காக செய்யும் பணி என்பதால், இதுவரை எடுத்த நெகிழி கழிவுகளுக்கும், இனிமேல் எடுக்கவிருக்கும் நெகிழி கழிவுகளுக்கும் கட்டணமின்றி எடுத்து செல்ல அனுமதிக்குமாறு கேட்டு சரோஜினி பொன்னையா பவுண்டேசன் நிறுவனம் 29.05.2021ல் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு கிலோ ஒன்றுக்கு 0.50 பைசா விலை விகிதத்தை நிர்ணயம் செய்யப்பட்ட தீர்மான எண்.79, நாள்.25.02.2021–ல் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்கண்ட நெகிழி கழிவுகளை தாழையுத்து சிமெண்ட் ஆலைக்கு மாநகராட்சி லாரி மூலம் அனுப்புவதற்கான செலவினம் (டீசல்) மேற்கண்ட சரோஜினி பொன்னையா பவுண்டேசன் நிறுவனத்திற்கு ஒரு கிலோவிற்கு 0.50 பைசா என வேலை உத்தரவு வழங்கியுள்ளதை விட மாநகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுவதால் ஏற்கனவே மாநகராட்சியிலிருந்து மேற்கண்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட 87 டன் நெகிழி கழிவுகளை இலவசமாக வழங்கவும், இனி எடுக்கப்போகும் நெகிழி கழிவுகளை மேற்கண்ட சரோஜினி பொன்னையா பவுண்டேசன் நிறுவனத்திற்கு இலவசமாக எடுத்து செல்லவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு –** மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏதும் ஏற்படாது என்பதால் மன்றம் அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 165/2021/எச்1

**தீர்மானம் எண். 263 – அங்கீகரிக்கப்பட்டது.**

13. இம்மாநகராட்சிக்குட்பட்ட கே.பி.ரோடு பகுதியில் சாலை விரிவாக்கம் பணிகள் நடைபெற்ற போது சாலை அருகாமையில் நின்ற மின்கம்பங்கள் அனைத்தும் தமிழ்நாடு மின்வாரியத்தால் மாற்றி அமைக்கும் போது இடையூறாக உள்ள மரக்கிளைகளை அப்புறப்படுத்திட அறிவுறுத்தப்பட்டதன் படி ஒப்பந்ததாரர் திரு.R.விஜயகுமார் என்பவர் மூலம் மரக்கிளைகளை அகற்றப்பட்டதற்க்கும் அதற்குண்டான செலவீனம் ரூ.21,300/–க்கு (ரூபாய் இருபத்தி ஒன்றாயிரத்தி முன்னூறு) அங்கிகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண். 7573/2021/இ1

**தீர்மானம் எண். 264 – அங்கீகரிக்கப்பட்டது.**

14. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38–ல் வலம்புரிவிளை உரக்கிடங்கின் வடக்கு பகுதியில் பாதாள சாக்கடை Treatment plant–க்கு செல்லும் பாதையில் Leakage drain மற்றும் அணுகு சாலை அமைத்து கான்கிரீட் தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்து லட்சம்) அனுமதிக்கும் ஒப்பந்தப்புள்ளி கோர அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண். 7137/2021/இ1

**தீர்மானம் எண். 265 – அங்கீகரிக்கப்பட்டது.**

15. இம்மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் மெயின்ரோடு சந்திப்பில் உள்ள ஓடையில் மண் நிறைந்துள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி திரு. V.டேவிட் மைக்கேல் ராஜ் என்பவர் மூலம் அகற்றப்பட்டதற்கும், அதற்க்கான செலவுத்தொகை ரூ.14,800/–ஐ (ரூபாய் பதினான்காயிரத்தி எண்ணூறு) ஒப்பந்ததாரர் திரு.V.டேவிட் மைக்கேல் ராஜ் என்பவருக்கு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண். 7571/2021/இ1

**தீர்மானம் எண். 266 – அங்கீகரிக்கப்பட்டது.**

16. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39–ல் கீழமறவன்குடியிருப்பு பகுதியில் உள்ள போர்வெல் மின்மோட்டார் அறை முற்றிலும் சேதமடைந்துள்ளதால் புதிதாக மின்மோட்டார் அறை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,22,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி இருபத்தி இரண்டாயிரம்) அனுமதிக்கும், ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைக்கு அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு –** 1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி

அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று
ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை
அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7572/2021/இ1

**தீர்மானம் எண். 267 – அங்கீகரிக்கப்பட்டது.**

17. இம்மாநகராட்சிக்கு சொந்தமான துவரங்காடு சந்திப்பில் இருந்து முக்கடல் அணைக்கு செல்லும் வழியில் உள்ள இரண்டு Break pressure tank அமைந்துள்ள இடத்தினை சுற்றி சுற்றுசுவர் அமைத்து Tank–ல் உள்ள பழுதடைந்த Slab–ஐ மாற்றி புதியதாக slab அமைத்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,10,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்தி பத்தாயிரம்) மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண். 7135/2021/இ1

**தீர்மானம் எண். 268 – அங்கீகரிக்கப்பட்டது.**

18. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 52 வரையில் உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் உற்பத்தி ஆகும் புழுக்களை கண்டறிந்து மருந்துகள் தெளிப்பதற்கு மாமன்ற தீர்மான எண்.403, நாள்.30.09.2019–இன் படி CLC மூலமாக 298 பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி தினமும் ரூ.250/–னை கூலி நிர்ணயம் செய்து பணியினை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பொது நலன் கருதி மேற்படி பணியாளர்களை கொண்டு சம்பந்தப்பட்ட பணியினை 01.04.2021 முதல் 31.10.2021 வரை மீண்டும் தொடரவும் அதற்கான செலவு தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.22.25 இலட்சம் வீதம் ரூ.1,34,00,000/– தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்வதற்கு அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண். 23313/2012/எச்4

**தீர்மானம் எண். 269 – அங்கீகரிக்கப்பட்டது.**

19. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.52, கேபி.ரோடு, புல எண்.2503–இல் உள்ள 10952 சதுர அடி அளவிலான காலிமனைக்கு டாக்டர்.சந்தோஷ் ஜோசப் என்பவர் பெயரில் காலிமனை வரி நிர்ணயம் செய்து வழங்க கேட்கப்பட்டதன் அடிப்படையில் 2011–2012– II ஆம் அரையாண்டு முதல் ஒரு அரையாண்டிற்கு ரூ.4819/– வீதம் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட காலிமனை வரியினை ஆட்சேபித்து நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மாநகராட்சி ஆணையரை 1–ஆம் பிரதிவாதியாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலினை 2–ஆம் பிரதிவாதியாகவும் கட்சி சேர்த்து வழக்கு

தொடரப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கில் ஆணையர் சார்பாக மாநகர்மன்ற வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.மூர்த்தி, அவர்களை ஆஜராக கேட்டும், வழக்கு முடியும் வரை அனைத்து செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்

கோப்பு எண். 7200/2021/அ3

**தீர்மானம் எண். 270 – அங்கீகரிக்கப்பட்டது.**

20. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களிலும் (UPHC) COVID –19 தடுப்பு பணி மற்றும் தடுப்பூசி தொடர்பான அறிக்கைகள் அனுப்ப புள்ளிவிபர தொகுப்பாளர்கள் ஏற்கனவே பணி செய்து வருகின்றனர். பெருந்தொற்றின் தாக்கம் தொடர்ந்து இருப்பதாலும் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற்று வருவதாலும் மேலும் கூடுதலாக முற்றிலும் தற்காலிகமாக 3 மாதங்களுக்கு (7/2021 to 9/2021) மேற்படி 5 நபர்கள் பணியாற்ற அனுமதி வேண்டியும் இதற்கான செலவினம் (615x5x90=2,76,750/–) பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1127/2018/எச்4

**தீர்மானம் எண். 271 – அங்கீகரிக்கப்பட்டது.**

21. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN 74D–2036–ற்கு தகுதிசான்று பெறுவதற்கும், பழுதுவேலைகள் சரி செய்வதற்கும் அனுமதிக்கு.

பழுது வேலை விபரம்:

1. நான்கு வீல்களும் களற்றி ரிட்டனர் மாற்றி கீரிஸ் வைத்தல்.
2. நான்கு வீல்களும் பிரேக் சிலிண்டர் 8 எண்ணம் புதியது பொருத்துதல்.
3. ஆயில் பில்டர், டீசல் பில்டர் புதியது பொருத்தி புதிய ஆயில்கள் ஊற்றுதல்
4. ஸ்டீரிங் பாக்ஸ் களற்றி பேரிங் மாற்றி, எண்டகள் புதியது பொருத்துதல்.
5. புள்வாட்டர் சர்வீஸ் செய்தல்.
6. கேபிள் டாப் ஏர்பாந்த சரி செய்தல், டோர்லாக் சரி செய்தல்.
7. ரேடிட்டர் ஓவர்ராலிஸ் செய்து, சைடுடேங் (பிளாஸ்டிக்) மாற்றுதல்.
8. பெயின்ட் மஞ்சள் வர்ணம் பூசி எழுத்துகள் எழுதவும்.
9. ஹாரண் இரண்டு (பெரிய நூட்ஸ்) பொருத்தி கட்டவுட்டர் வைக்கவும்.
10. வால்வு இரண்டு புதியது பொருத்தி 2 இன்ச் வாஸ் 30 மீட்டர் புதியது.
11. ஸீப்ட் பம்பு களற்றி சரி செய்து மாற்றுதல்.
12. ஜாயிண்ட்ஸ்டார் புதியது பொருத்துதல்.

மேற்கண்ட பழுது வேலைகள் சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவுத்தொகை ரூ.75000/- (ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.10428/2017/இ2

**தீர்மானம் எண். 272 – அங்கீகரிக்கப்பட்டது.**

22. இம்மாநகராட்சி குடிநீர் வாகனம் எண்.TN 74D-2037-ற்கு தகுதிசான்று பெறுவதற்கும், பழுதுவேலைகள் சரி செய்வதற்கும் அனுமதிக்கு.

பழுது வேலை விபரம்:

1. நான்கு வீல் கீரிஸ்.
2. இஞ்சின் ஆயில் மாற்ற
3. வலது டோர் டிங்கரிஸ்
4. முன் கண்ணாடி, கிளாஸ் ரம்பர் மாற்ற
5. பின் மட்காடு இரண்டும் மாற்ற
6. சேஸ் சரி செய்தல்
7. நான்கு வீல் ஸ்பிரிங் பிளேட் வரப்பு அடித்து மாட்டுதல்.
8. கெட் லைட், டேஞ்சர் லைட், காரன் லிவர், கெட் லைட் கட்டவுட், பல்பு மாற்ற
9. இரண்டு சீட் கவர் மாற்றுதல்
10. கேபிள் ரெக்சின் மாற்றுதல்
11. ரேடிட்டர் கிளீன் பண்ணி மாற்றுதல்
12. வாகனம் பெயின்ட் அடித்தல்
13. கியர் பாக்ஸ் கழற்றி கிளச் பழுது நீக்கி NC, Sc சிலிண்டர் மாற்றுதல்.
14. நான்கு வீல் போல்ட், மாற்றி பிரேக் கிட் மாற்றி பிரேக் செக்கப் செய்தல்
15. சைடு மெரர் இரண்டு மாற்றுதல்
16. கியர் பாக்ஸ் ஆயில், கிரவுண் ஆயில் மாற்றுதல்
17. கம்னீட் ஓராயில் செய்தல்.

மேற்கண்ட பழுது வேலைகள் சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவுத்தொகை ரூ.95000/- (ரூபாய் தொண்ணூற்றி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.9081/2007/இ2

**தீர்மானம் எண். 273 – அங்கீகரிக்கப்பட்டது.**

23. இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையிலிருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் 600mm SPC பிரதான குழாய் புத்தேரி AK நகர் மற்றும் திட்டுவிளை துவரங்காடு பகுதியில் சிப்ஸ் கடை எதிர்புறம் ஆகிய இரண்டு இடங்களில் குடிநீர்குழாய் பழுதடைந்துள்ளதை சரி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.75000/-(ரூபாய் எழுபத்தி ஐயாயிரம்)-க்கு அனுமதியும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற முன் அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6510/2021/இ2

**தீர்மானம் எண். 274 – அங்கீகரிக்கப்பட்டது.**

24. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 315KVA Transformer பழுதடைந்துள்ளதை சரி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.99000/-(ரூபாய் தொண்ணூற்றி ஒன்பதாயிரம்)-க்கு அனுமதியும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற முன் அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6511/2021/இ2

**தீர்மானம் எண். 275 – அங்கீகரிக்கப்பட்டது.**

25. இம்மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Pump house III Unit no. II Submersible motor 50 HP பழுதடைந்துள்ளதை சரி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.71000/-(ரூபாய் எழுபத்தி ஒன்றாயிரம்)-க்கு அனுமதியும் குடிநீர் பணியின் அவசர

அவசியம் கருதி மாமன்ற முன் அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6508/2021/இ2

**தீர்மானம் எண். 276 – அங்கீகரிக்கப்பட்டது.**

26. இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் நீரேற்று நிலையத்தில் Unit No.1–ல் உள்ள 60HP Centrifugal pump மற்றும் மார்த்தால் நீரேற்று நிலையத்தில் Unit no.1 –ல் உள்ள 60HP Centrifugal pumpset பழுதடைந்துள்ளதை சரி செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,10,000/–(ரூபாய் இரண்டு இலட்சத்தி பத்தாயிரம்)–க்கு அனுமதியும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற முன் அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.6507/2021/இ2

**தீர்மானம் எண். 277 – அங்கீகரிக்கப்பட்டது.**

27. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74R.3406–ற்கு (4) நான்கு எண்ணம் டயர்கள் மற்றும் டியூப் புதியதாக வாங்கி பொருத்துவதற்கு 26.02.2021 தேர்தல் நடத்தை விதிமுறைகள் வரப்பட்டுள்ளதால் வாகன பயன்பாட்டின் முக்கியத்துவம் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.22400/–க்கு (இருபத்தி இரண்டாயிரத்தி நானூறு) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் விதி எண்.15–ன் கீழ் மேற்படி பணிக்கு M/s. Asirvatham Tyres Nagercoil மூலம் வாங்கி பொருத்துவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.624/2019/இ2

**தீர்மானம் எண். 278 – அங்கீகரிக்கப்பட்டது.**

28. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74 AL 1924–ற்கு நான்கு எண்ணம் டயர்கள் மற்றும் டியூப் புதியதாக வாங்கி பொருத்துவதற்கு 26.02.2021 தேர்தல் நடத்தை விதிமுறைகள் வரப்பட்டுள்ளதால் வாகன பயன்பாட்டின் முக்கியத்துவம் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.48000/–க்கு (நாற்பத்தி எட்டாயிரத்திற்கு) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் விதி எண்.15–ன் கீழ் மேற்படி பணிக்கு M/s. Asirvatham Tyres நாகர்கோவில் மூலம் வாங்கி பொருத்துவதற்கு விநியோக உத்தரவு வழங்கியதும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.1767/2012/இ2

**தீர்மானம் எண். 279 – அங்கீகரிக்கப்பட்டது.**

29. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தை கடைஎண் 30, வரிவதிப்புஎண் 150/2017030, திரு. M. அஜித் என்பவர் உரிமம் எடுத்து நடத்தி வந்தார். அன்னார் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாது என்றும், தான் செலுத்திய வைப்புத்தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார்.

இம்மாநகராட்சி வருவாய் ஆய்வாளரின் அறிக்கையில் வடசேரி கனகமூலம் சந்தையில் திரு. அஜித் என்பவர் கடைஎண் 30 –ஐ உரிமம் எடுத்து நடத்தி வந்ததாகவும், தற்போது மேற்படி கடையினை நடத்த இயலாது என்றும் அதனால் தான் செலுத்திய வைப்புத்தொகையினை திரும்ப வழங்ககேட்டுள்ளார் என்றும் மனுதாரர் கடையினை உரிமம் எடுத்து 9 ஆண்டுகள் முடிவடையாத நிலையில் ஒப்படைக்க முன்வந்துள்ளதாகவும், மேற்படி கடைக்கு 30–06–2021 வரைவுள்ள மாதவாடகையினை வசூல் செய்திடவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையில் ஏற்படும் நிதியிழப்பிற்கும் அன்னாரே பொறுப்பு எனவும், மேற்படி கடைக்கு மனுதாரரால் செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்காமல் நிறுத்தி வைத்திடவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படியும், மன்ற அனுமதி பெற்றும் மாநகராட்சிக்கு நிதியிழப்புகள் ஏற்படாத வகையில் முறையாக நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார்.

எனவே இம்மாநகராட்சி வருவாய் ஆய்வாளரின் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி மேற்படி கடைஎண் 30–க்கு மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையில் நிதியிழப்பு ஏற்பட்டாலும், தணிக்கை தடை ஏற்பட்டாலும் திரு. M. அஜித் என்பவரே பொறுப்பாக்கி மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதுடன் மேற்படி கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மேலும் விளம்பரம் செலவினத்திற்கும் மன்ற அனுமதிவேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.4503/2021/அ6

**தீர்மானம் எண். 280 – அங்கீகரிக்கப்பட்டது.**

30. இம்மாநகராட்சிக்குட்பட்ட ஹென்றி ரோடு பகுதியில் குடிநீர் குழாய் பதிக்கப்பட்டமையால் மேற்படி சாலையில் கழற்றப்பட்ட பேவர்பிளாக் கற்களை திரும்ப பதித்திட ஏதுவாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,35,000/–க்கு (ரூபாய் எட்டு லட்சத்தி முப்பத்தைந்தாயிரம்) மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.7570/2021/இ1

**தீர்மானம் எண். 281 – அங்கீகரிக்கப்பட்டது.**

31. இம்மாநகராட்சிக்குட்பட்ட வாத்தியார் விளை மீன் சந்தை பகுதியில் உள்ள வாறுகால் கவரிங் சிலாப் பழுதடைந்து உள்ளதால், மேற்படி வாறுகாலில் மேல் மூடி அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25000/–க்கு (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.7568/2021/இ1

**தீர்மானம் எண். 282 – அங்கீகரிக்கப்பட்டது.**

32. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழையும் பகுதியில் குறுக்காக செல்லும் வாறுகாலின் மேற்பகுதி சேதமடைந்துள்ளதால் அதனை சரி செய்திடவும், பேருந்து நிலைய அணுகுசாலையில் பள்ளங்கள் இருப்பதால் அதனை சிமெண்ட் மற்றும் Wet mix போட்டு fillup செய்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.13,000/–க்கு (ரூபாய் பதிமூன்றாயிரம்) மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.7567/2021/இ1

**தீர்மானம் எண். 283 – அங்கீகரிக்கப்பட்டது.**

33. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி தாணுமாலையன் புதுத்தெருவில் ஏற்பட்ட பள்ளத்தின் அடிப்பகுதியில் செல்லும் பழுதடைந்த கழிவு நீர் குழாயினை அப்புறப்படுத்தி அப்பகுதியில் கழிவு நீர் செல்வதற்கு ஏதுவாக ஒரு சிறுபாலம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.71500/–க்கு (ரூபாய் எழுபத்தி ஒன்றாயிரத்தி ஐநூறு) மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.7566/2021/இ1

**தீர்மானம் எண். 284 – அங்கீகரிக்கப்பட்டது.**

34. இம்மாநகராட்சி சொந்தமான அலுவலக கட்டடத்தில் மாநகராட்சி ஆணையருக்கான நேர்முக உதவியாளர் (PA) மற்றும் தனி எழுத்தர் (PC) ஆகியோருக்கான தனிப்பட்ட அறைகள் ஆணையர் அறைக்கு அருகாமையில் உள்ள அறையில் PA மற்றும் PC–க்கான Cabin கள் அமைத்திடும் பணிக்கு உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பெற்றதில் பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| திரு.V.ஜோசப் அருள்ராஜ் | மதிப்பீட்டை விட 0.95% குறைவு |
| திரு. V. டேவிட் மைக்கேல் ராஜ் | மதிப்பீட்டு விலை விகிதம் |

**அலுவலக குறிப்பு** – வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.V.ஜோசப் அருள்ராஜ் என்பவரது விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.11988/2020/இ1

**தீர்மானம் எண். 285 – அங்கீகரிக்கப்பட்டது.**

35. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையான செட்டிக்குளம் சந்திப்பு முதல் கோட்டார் சந்திப்பு வரை AMRUT குழாய் அமைத்தல் மற்றும் UGSS குழாய் அமைத்தல் பணிகள் முடிவடைந்தவுடன் மேற்படி சாலையினை Wet mix தார்தளம் அமைத்து சாலையினை சீரமைக்கும் பொருட்டு (Phase–I) அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** –1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7988/2021/இ1

**தீர்மானம் எண். 286 – அங்கீகரிக்கப்பட்டது.**

36. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையான செட்டிக்குளம் சந்திப்பு முதல் கோட்டார் சந்திப்பு வரை AMRUT குழாய் அமைத்தல் மற்றும் UGSS குழாய் அமைத்தல் பணிகள் முடிவடைந்தவுடன் மேற்படி சாலையினை Wet mix தார்தளம் அமைத்து சாலையினை சீரமைக்கும் பொருட்டு (Phase–II) அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** –1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.7987/2021/இ1

**தீர்மானம் எண். 287 – அங்கீகரிக்கப்பட்டது.**

37. இம்மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன் கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மாடியில் அறைகள் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,90,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சத்தி தொண்ணூறாயிரம்) மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.8049/2021/இ1

**தீர்மானம் எண். 288 – அங்கீகரிக்கப்பட்டது.**

38. இம்மாநகராட்சிக்கு எதிராக திரு.N.கண்ணன் ஒப்பந்ததாரர் பணி செய்த வகைக்கு பட்டியல் தொகை வழங்க கேட்டு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD) No. 12650/2020 –ன் மீதான 13.10.2020–ம் தேதிய உத்தரவின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லையென தெரிவித்து , நீதிமன்ற அவமதிப்பு வழக்கு Cont. (MD) No. 818/2021 தொடரப்பட்டது. மேற்படி வழக்கின் மீது மாநகராட்சி சார்பில் திரு.P.ஆதிமூலபாண்டியன் – வழக்கறிஞர் ஆஜரான வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.7500/– தனது 15.07.2021–ம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளார். இந்நிலையில் அன்னார் மேற்படி வழக்கின் 16.07.2021–ம் தேதிய விசாரணையில் மாநகராட்சி சார்பில் ஆஜராகி வாதாடி வழக்கு தள்ளுபடி செய்து மாண்பமை நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, மேற்க்கண்ட வழக்கின் மீது திரு.P.ஆதிமூலபாண்டியன் – வழக்கறிஞர் ஆஜரான வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.7500/– வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.8636/2020/இ1

**தீர்மானம் எண். 289 – அங்கீகரிக்கப்பட்டது.**

39. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடிவீஸ்வரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் முன்பகுதியில் நோயாளிகள் வந்து அமரும் விதமாக தரைதளம் அமைத்தும், பாதுகாப்புக்காக Grill அமைக்கவும், தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,60,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபதாயிரம் மட்டும்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.7990/2021/இ1

**தீர்மானம் எண். 290 – அங்கீகரிக்கப்பட்டது.**

40. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020–ன் கீழ் ரு.3.00 இலட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21, வடக்கு சூரன்குடி முஸ்லீம் சமுதாய மையாளியில் ஓய்வறை கட்டுதல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/2211/2019 நாள்.18.02.2021–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 06.07.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.R. விஜயகுமார் | மதிப்பீட்டை விட 15.86% குறைவு |
| 2 | M/S. Homage Infrastructure services | மதிப்பீட்டை விட 4.95% குறைவு |

**அலுவலக குறிப்பு –** பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 15.86% குறைவாக கொடுத்துள்ள திரு.R. விஜயகுமார் என்பவருக்கு கூடுதல் வைப்புதொகை ரூ.20,920/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.141/2020–2021

**தீர்மானம் எண். 291 – அங்கீகரிக்கப்பட்டது.**

41. இம்மாநகராட்சி அலுவலக புதிய கட்டிடத்தில் கூடுதல் பணி மேற்கொள்ளும் பொருட்டு ரூ.5.50 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்ட வகைக்கு ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை Accord Advertising Agencies நிறுவனம் மூலம் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்டுள்ளபடி பட்டியல் தொகை வழங்க கேட்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பில் எண்.AAA/0061/21–22 | – நாள்.03.07.2021 |
| The Hindu (All India) | – 139296.00 |
| மாலை முரசு – தமிழ் | – 19200.00 |
| | --------- |
| | 158496.00 |
| CGST 2.50% | 3962.40 |
| SGST 2.50% | 3962.40 |
| | --------- |
| | 166421.00 |
| | --------- |

மேற்கண்டுள்ள பில்படியானத்தொகை ரூ.166421/– ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு Accord Advertising Agencies நிறுவனத்திற்கு வழங்க மாமன்ற அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு –** 1. அங்கீகரிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் ஒப்புதலுடன் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1642/2021/இ1

**தீர்மானம் எண். 292 – அங்கீகரிக்கப்பட்டது.**

42. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலைய அணுகு சாலையான காசிவிஸ்வநாதர் கோவில் சந்திப்பு முதல் கிருஷ்ணன்கோவில் நீரேற்று நிலையம் அருகே உள்ள இந்தியன் பெட்ரோல் பம்ப் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலை NH 47–B–க்கு சொந்தமான தார் சாலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்கு தோண்டப்பட்ட சாலையினை சீரமைத்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரு.23,80,000/– (ரூபாய் இருபத்தி மூன்று இலட்சத்தி எண்பதாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் திரு.K.கைலாஷ்குமார் என்பவர் மூலம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.1793/2021/இ1

**தீர்மானம் எண். 293 – அங்கீகரிக்கப்பட்டது.**

43. இம்மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய பகுதியான கிருஷ்ணன் கோவில் தலைமை சுத்திகரிப்பு நிலையம் அருகே உள்ள இந்தியன் பெட்ரோல் பம்ப் முதல் வெட்டூர்ணிமடம் பென்சாம் மருத்துவமனை வரை உள்ள தேசிய நெடுஞ்சாலை NH 47–B–க்கு சொந்தமான தார் சாலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பிரதான குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்றதால் சேதமடைந்துள்ள சாலைகளை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22,40,000/–க்கு (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்தி நாற்பதாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் திரு.K.கைலாஷ்குமார் என்பவர் மூலம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.1794/2021/இ1

**தீர்மானம் எண். 294 – அங்கீகரிக்கப்பட்டது.**

44. இம்மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கொரோனா 2–வது அலை காரணமாக தொற்று பாதித்த அனைத்து தெருக்களிலும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக தெருக்களின் இருபுறமும் பச்சை நிற வலை கட்டி தடுப்பு வேலி அமைக்க சுகாதாரதுறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி தொற்று பாதித்த அனைத்து பகுதிகளிலும் தடுப்பு வேலி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,92,000/– (ரூபாய் ஒரு லட்சத்தி தொண்ணூற்றி இரண்டாயிரம் மட்டும்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு –** 1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8214/2021/இ1

**தீர்மானம் எண். 295 – அங்கீகரிக்கப்பட்டது.**

45. நாகர்கோவில் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணிக்கு கடந்த 30.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T. துரை | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.T.துரை ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.02/2021–2022

**தீர்மானம் எண். 296 – அங்கீகரிக்கப்பட்டது.**

46. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pumphouse III –ல் unit I 30HP Submersible motor பழுதடைந்துள்ளதை சரி செய்தல் பணிக்கு கடந்த 23.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T. அசோக்குமார் | மதிப்பீட்டு விலை விகிதம் |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.T. அசோக்குமார் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.139/2020–2021

**தீர்மானம் எண். 297 – அங்கீகரிக்கப்பட்டது.**

47. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pumphouse IV –ல் Unit I 75HP Centrifugal pump–லுள்ள motor winding பழுதடைந்துள்ளதை சரி செய்தல் பணிக்கு கடந்த 23.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T. அசோக்குமார் | மதிப்பீட்டு விலை விகிதம் |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.T. அசோக்குமார் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

மதிப்பீட்டு எண்.137/2020–2021

**தீர்மானம் எண். 298 – அங்கீகரிக்கப்பட்டது.**

48. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pumphouse III –ல் unit I 50HP Submersible motor பழுதடைந்துள்ளதை சரி செய்தல் பணிக்கு கடந்த 23.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T. அசோக்குமார் | மதிப்பீட்டு விலை விகிதம் |

பெறப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.T. அசோக்குமார் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.138/2020–2021

**தீர்மானம் எண். 299 – அங்கீகரிக்கப்பட்டது.**

49. இம்மாநகராட்சிக்கு சொந்தமான தளியபுரம் பூங்காவிற்கு உடற்பயிற்சி சாதனங்கள் வாங்கிடவும் அதற்கான செலவீனம் ரூ.2,42,000/–ஐ சமூக பங்களிப்பு நிதியில் (CSR Fund) மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.2599/2021/இ1

**தீர்மானம் எண். 300 – அங்கீகரிக்கப்பட்டது.**

50. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான கோட்டார் சந்திப்பு முதல் பறக்கை சந்திப்பு வரை பாதாள சாக்கடை பணி முடிவு பெற்று AMRUT திட்ட பணிகள் ஒருபுறம் குழாய் பதிப்பு முடிவு பெற்றுள்ளது. அடுத்தபுறம் குழாய் பதிப்பு பணி நடைபெற உள்ளது. இந்நிலையில் மேற்படி சாலை பிரதான சாலையென்பதால், போக்குவரத்து பிரச்சனை எழாவண்ணம், மேற்படி சாலையினை சீரமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.21,50,000/–க்கு (ரூபாய் இருபத்தி ஒன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7985/2021/இ1

**தீர்மானம் எண். 301 – அங்கீகரிக்கப்பட்டது.**

51. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையான செட்டிக்குளம் சந்திப்பு முதல் கோட்டார் சந்திப்பு வரை AMRUT குழாய் அமைத்தல் மற்றும் UGSS குழாய் அமைத்தல் பணிகள் முடிவடைந்தவுடன் மேற்படி சாலையினை Wet mix தார்தளம் அமைத்து சாலையினை சீரமைக்கும் பொருட்டு (Phase–III) அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.16,70,000/–க்கு (ரூபாய் பதினாறு இலட்சத்தி எழுபதாயிரம்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7986/2021/இ1

**தீர்மானம் எண். 302 – அங்கீகரிக்கப்பட்டது.**

52. இம்மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய சாலையான சூரங்குடி நீரேற்று நிலையம் முதல் கீழக்கோணம் வரை உள்ள சானல் கரை சாலை மழையினாலும் பிரதான குடிநீர் குழாய் பதித்ததாலும் முற்றிலும் சேதமடைந்து காணப்படுவதால் அச்சாலையில் தார்தளம் அமைத்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.23,00,000/–க்கு (ரூபாய் இருபத்தி மூன்று இலட்சம் மட்டும்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8047/2021/இ1

**தீர்மானம் எண். 303 – அங்கீகரிக்கப்பட்டது.**

53. இம்மாநகராட்சிக்குட்பட்ட வேதநகர் சானல் கரை முதல் அப்துல்காதர் மருத்துவமனை வரை உள்ள சாலையானது மழையினாலும் பிரதான குடிநீர் குழாய் பதித்ததாலும் முற்றிலும் சாலை சேதமடைந்து காணப்படுவதால் மேற்படி சாலையில் தார்தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,00,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – 1. அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8048/2021/இ1

**தீர்மானம் எண். 304 – அங்கீகரிக்கப்பட்டது.**

54. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் Covid 19–ல் பாதிக்கப்பட்ட நோயாளிகளை குணப்படுத்தும் பொருட்டு அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தற்காலிக Covid care centre ஆக மாற்றும் பொருட்டு பணிகள் மேற்கொள்ள வகைக்கு கீழ்கண்டுள்ள பட்டியல் படியான பணிகள் அவசர அவசரம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் ஒப்புதலுடன் மாநகராட்சி சட்ட விதி எண்.15 கீழ் பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மதிப்பீடு எண் | பணிமேற்கொள்ளப்பட்ட இடம் | மதிப்பீட்டுத் தொகை | பணி செய்த ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 48/2020–21 | எஸ்.எல்.பி.அரசு மேல்நிலைப்பள்ளி | 2250000 | திரு.ஜெங்கின்ஸ் |
| 2 | 49/2020–21 | கோணம் பொறியியல் கல்லூரி | 850000 | திரு.ஜெங்கின்ஸ் |
| 3 | 50/2020–21 | கோணம் தொழில்நுட்ப கல்லூரி | 790000 | திரு.விஜயகுமார் |
| 4 | 51/2020–21 | பெல்பீல்டு பள்ளி | 150000 | திரு.ஜெங்கின்ஸ் |
| 5 | 52/2020–21 | கோணம் அரசு கலை கல்லூரி | 250000 | திரு.விஜயகுமார் |
| 6 | 85/2020–21 | ஆசாரிபள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை | 140000 | திரு.ஜெங்கின்ஸ் |

**அலுவலக குறிப்பு – பதிவு செய்து அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.8171/2021/இ1

**தீர்மானம் எண். 305 – அங்கீகரிக்கப்பட்டது.**

55. கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உறுப்பினர் செயலரின் கடிதம் எண்.1318/2021ககுமாநஊஅ நாள்.25.06.2021–ல் இம்மாநகராட்சிக்குட்பட்ட வேம்பனூர் கிழக்கு கிராமம் நகர அளவை எண்.804/13A, 804/13B1C–இல் 8035 சதுர மீட்டர் (1.98 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவு ஒப்புதல் வழங்க 1. R.லிங்கராஜன், 2. P.தாமஸ் ஆப் பெல்லாராணி (உரிமையாளர்) திரு.T.சுயம்புலிங்கம் (பவர் ஏஜென்ட்) என்பவர்கள் ஒப்புதல் வழங்க கேட்டதை தொடர்ந்து சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ம.வ/க.கு.மா.ந.ஊ.அ எண்.14/2021 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. உத்தேச மனைப்பிரிவிற்கு நகராட்சி கட்டட விதிகள்

மற்றும் வழிமுறைகளை பின்பற்றி உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பொறியாளர் அவர்களின் 29.07.2021–ஆம் தேதிய குறிப்பு படி மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளுக்கு புதிய தார்தளம், மழைநீர் வடிகால் ஓடை அமைக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் குடிநீர் குழாய், தெருவிளக்கு அமைத்தலுக்கான மதிப்பீடு தொகை ரூ.1,10,000/– மாநகராட்சிக்கு செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்தியன் வங்கி வரைவோலை எண்: 102700, நாள்.29.07.2021 –இன் படி ரூ.1,10,000/– செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு நிபந்தனைகள் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு உட்பிரிவு செய்து அதன் நகல் மற்றும் அனுமதி கட்டணம் ரூ.10,000/– மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.28,000/– மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சாலைகள் 2276.53 ச.மீ. மற்றும் மாநகராட்சிக்கான பொது ஒதுக்கீடு B 35.00 ச.மீ–க்கான தான பத்திரம் எண்.2020/2021–ன் படி பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதியினை மாநகராட்சியின் பொறுப்பிலும், பராமரிப்பிற்கும் எடுத்துக்கொள்ளவும் மனைபிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.6367/2021/எப்1

**தீர்மானம் எண். 306 – அங்கீகரிக்கப்பட்டது.**

56. இம்மாநகராட்சியில் 14–வது மத்திய நிதிக்குழு மானியத்தில் வார்டு எண். 10–ல் தளவாய் தெருவில் பேவர்பிளாக் அமைத்தல் பணி மேற்க்கொள்ளும் போது மதிப்பீட்டில் centering பணியானது 100m2 மட்டுமே உள்ளது. ஆனால் பணி மேற்க்கொள்ளும் போது 34.26m2 அதிகமாக மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. Plain cement concrete 1:2:4 mix 20mm metal மதிப்பீட்டில் 20m3 மட்டுமே உள்ளது. பணி மேற்க்கொள்ளும் போது கூடுதலாக 42.69m3 பணி செய்யப்பட்டுள்ளது. Paver block பணியானது மதிப்பீட்டில் 2480m3 உள்ளது. பணிமேற்க்கொள்ளும் போது 798.60m2 குறைவாக மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. Earth cutting பணியானது மதிப்பீட்டில் இல்லை. பணி மேற்கொள்ளும் போது 172.74m3 மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் Wet mix Macadam பணியானது மதிப்பீட்டில் குறிப்பிடப்படவில்லை பணி மேற்க்கொள்ளும் போது 277.04M3 மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி பணி மேற்க்கொள்ள மதிப்பீடு தயார் செய்யும் போது இச்சாலையில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மட்டுமே செய்து முடிக்கப்பட்டு இருந்தது. மேற்படி பணி மேற்க்கொள்ளும் முன்னர் அம்ரூத் திட்டம் மூலம் பிரதான குடிநீர் குழாய் மற்றும் வீட்டு இணைப்புகள் தளவாய் தெரு பகுதிகளில் உள்ள சிறுபாலம் ஆகியவை சேதமடைந்ததால் Wet mix macadam பணி கூடுதலாக செய்ய வேண்டிய நிலையும் பாலம் மற்றும் பக்க சுவர்கள் சேதமடைந்ததால் Concrete Quantity –ம் சேர்த்து கூடுதலாக பணி மேற்க்கொள்ள வேண்டியிருந்தது. எனவே மேற்படி பணிகள் கூடுதலாக செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.144/2019–2020

**தீர்மானம் எண். 307 – அங்கீகரிக்கப்பட்டது.**